Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

# Valliammai from a Structuralist Perspective

**Dr. Murugu Thayanithy,** Director, Department of Tamil Language, National Institute of Education, Sri Lanka.
**ORCiD: https://orcid.org/0009-0001-5899-922X**
**DOI: 10.5281/zenodo.15831470**

## Abstract

*Structural analysis is a well-known approach in socio-cultural contexts. Structuralism is both a theory and a method of analysis that focuses on examining the relationships between individual components of a particular object or concept and the overall structure rather than studying the individual components in isolation. The study entitled "Valliammai from a Structuralist Perspective" is put forth on this approach. The terms Valliammai and Valliammaan are prevalent in contemporary Tamil literary discourse. Both terms refer to Valli, who was born into the Veda tribe and married to Murugan. This Valli is widely discussed in the Tamil literary sphere and has been elevated to a divine status. Kandapuranam's "Valli Thirumanappadalam" (The Chapter of Valli's Wedding) is the initial part of the work to identify her. However, in the Batticaloa Tamil region, the literary works "Valliammaan Ammaanai," "Valliammai Kooththu," and "Valli Thinaippunakkkaragam" discuss the personality and character of Valli. Among them, "Valli Thirumanappadalam" and "Valliammaan Ammaanai" are recited during temple festivals, while "Valliammai Kooththu" and "Valli Thinaippunakkkaragam" are performed as performing arts in certain regions. Thus, the single word Valliammai is currently central to these four literary works and highlights the greatness of Tamil culture. However, there appears to be no existing structuralist analysis of its content. So, there remains a lack of understanding of Valliammai's background and this lack has not been addressed by research. Therefore, this research paper aims to fill the gap by studying Valliammai's background from a structuralist perspective. To progress this comparative structuralist analysis of literary works, the research employs a comparative research method. A historical research method is used to understand and clarify its history and a textual reading method is adopted to clearly comprehend the subject matter. To enhance the research's precision, the books such as "Mattakkalapputh Thamizhaththil Valliammai" (Puranam – Ammaanai - Kooththu – Karagam), "Valliammai Kooththu," and "Valliammaan Ammaanai," edited by Murugu Thayanithy, along with other research articles and information related to this study were consulted. Besides, the book "Mattakkalapputh Thamizhaththil Valliammai" was selected for analysis based on source text criticism. Hence, this study reveals the birth of Valli in a cultural context, her unwavering determination despite being raised in the Veda community, the supportive role of her companions, the strong nature of the Veda tribe, and Valli's acceptance of Murugan.*

**Keywords:** Structuralism, Valliammai, *Kandapuranam*, *Valliammaan Ammaanai*.

## References

[1] Rathina Nayakar Sons, T.E. *Sri Kandapurana Vasanam.* Thirumagal Vilasa Achiyanthirasalai, 1954.
[2] Balasubramaniam, E. *Tamizh Kadavul Murugan Varalarum Thathuvamum.* Kaleeswarar, Coimbatore, 2000.

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

[3] Tamilvanan, Lena. *Kandapuranam.* Manimegalai Prasuram, Chennai, 1998.
[4] Dhayanithi, Murugu. *Valliyamman Ammanai.* Thamizh Puduvai, Puducherry, 2019.
[5] Dhayanithi, Murugu. *Mattakkalapputh Thamizhakkaththil Valliyamai, (Puranam – Ammanai - Kooththu - Karagam).* Ulagaththamizharaychi Niruvanam, Tharamani, Chennai, 2025.
[6] Dhayanithi, Murugu. *Valliyamai Kooththu.* Thamizh Puduvai, Puducherry, 2019.
[7] Ramanathan, Aru. *Sri Kandapuranam.* Prema Prasuram, Chennai, 1995.
[8] Vadivel, V. *Valli Thinaippunam – Karagam.* (Manuscript).

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

44

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

# அமைப்பியல் நோக்கில் வள்ளியம்மை

**முனைவர் முருகு தயாநிதி,** இயக்குநர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை
ORCiD: https://orcid.org/0009-0001-5899-922X
**DOI: 10.5281/zenodo.15831470**

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூகப் பண்பாட்டுத் தளத்தில் மேலெழுகின்ற ஆய்வுகளில் அமைப்பியல் ஆய்வும் பிரதானமான ஒன்று. அமைப்பியல் என்பது ஒரு கோட்பாடு மற்றும் பகுப்பாய்வு முறையாகும். இது ஒரு குறிப்பிட்ட பொருளை அல்லது கருத்தை அதன் தனிப்பட்ட கூறுகளை ஆராய்வதை விட, அக்கூறுகளுக்கு இடையிலான உறவுகளையும், அவை இணைந்து உருவாக்கும் ஒட்டுமொத்த கட்டமைப்பையும் மையமாக வைத்து ஆய்வு செய்யும் ஒரு கோட்பாட்டு அணுகுமுறையாகும். இத்தகைய அனுகுமுறையின் அடிப்படையில் அமைப்பியல் நோக்கில் வள்ளியம்மை எனும் ஆய்வு முன்கொண்டு செல்லப்படுகின்றது. வள்ளியம்மன், வள்ளியம்மை எனும் சொற்கள் இன்றைய பண்பாட்டுச் சூழலில் மேலெழுகின்றன. இந்த இரண்டு சொற்களும் வேடுவகுலத்தில் பிறந்து, முருகனால் ஆட்கொள்ளப்பட்ட வள்ளியையே சுட்டுகின்றது. இவ்வாறான வள்ளி தமிழியல் சூழலில் பெரிதும் பேசப்படுவதோடு, தெய்வநிலைக்கும் உயர்த்தப்பட்டுள்ள வள்ளியம்மையினை, முதலில் கந்தபுராணத்தின் வள்ளி திருமணப்படலம் அடையாளப்படுத்துகின்றது. ஆனால், மட்டக்களப்புத் தமிழகத்தில் வள்ளியம்மன் அம்மானை, வள்ளியம்மை கூத்து, வள்ளி தினைப்புனக் கரகம் எனும் இலக்கியங்கள் வள்ளியின் ஆளுமைபற்றிப் பேசுகின்றன. இந்த இலக்கியங்களில் வள்ளி திருமணப்படலம், வள்ளியம்மன் அம்மானை ஆகிய இரண்டு இலக்கியங்களும் ஆலயத்தில் விழாக்காலங்களில் பாராயணம் செய்யப்பட, வள்ளியம்மை கூத்து, வள்ளி தினைப்புனக் கரகம் ஆகிய இலக்கியங்கள் ஆற்றுகலைகளாகப் பயிலப்படுகின்றன. எனவே, வள்ளியம்மை எனும் ஒற்றைச் சொல் இன்று நான்கு இலக்கியங்களில் குவியமாகி, தமிழின் சிறப்பினை மேம்பட்டநிலையில் காட்டுகின்றமையினை, அமைப்பியல் அடிப்படையில் ஆராய்ந்து அதன் உள்ளடக்கத்தினை ஆய்வுலகம் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. இவ்வாறான இடைவெளி காணப்படுவதனால், வள்ளியம்மை பற்றிய பின்புலத்தினை அறிந்து, அதனை ஆய்வுலகம் வெளிக்கொண்டுவராத குறைபாடு காணப்படவே செய்கின்றன. எனவேதான், இந்த ஆய்வுக் கட்டுரை இத்தகைய குறைபாட்டினை நிவிர்த்தி செய்யும் வகையில் முன்கொண்டு, வள்ளியம்மையினுடைய பின்புலத்தினை அமைப்பியல் அடிப்படையில் வெளிக்கொண்டு வரும் நோக்கினை நிறைவு செய்கின்றது. இத்தகைய ஆய்வுக்கட்டுரை, இலக்கியங்களை ஒப்பீட்டு அமைப்பியல் அடிப்படையில் முன்கொண்டு செல்வதற்காக ஒப்பீட்டு ஆய்வுமுறையும், அதன் வரலாற்றினை அறிந்து தெளிவுபடுத்துவதற்காக வரலாற்று*

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**



*ஆய்வு முறையும், விடயங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்காகப் பனுவல் வாசிப்பு ஆய்வு முறையும் ஆய்வுக்கான ஆய்வு முறைகளாக அமைகின்றன. ஆய்வின் செம்மையினை குவியப்படுத்துவதற்காக முருகு தயாநிதி பதிப்பித்த மட்டக்களப்புத் தமிழகத்தில் வள்ளியம்மை, (புராணம் – அம்மானை - கூத்து – கரகம்) வள்ளியம்மை கூத்து, வள்ளியம்மன் அம்மானை ஆகிய புத்தகங்களுடன் இந்த ஆய்வு தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் பிற தகவல்களும் வாசித்தறியப்பட்டுகின்றன. அத்தோடு, மட்டக்களப்புத் தமிழகத்தில் வள்ளியம்மை எனும் புத்தகம் மூலப்பாடத் திறனாய்வின் அடிப்படையில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வு பண்பாட்டுத்தளத்தில் மேலுமும் வள்ளியின் பிறப்புப் பற்றியும் வேடுவ குலத்தில் வளர்ந்தபோதும் தனது நிலையில் இருந்து தளராது உறுதியாகச் செயற்பாட்டினை முன்கொண்டு சென்றமையினையும் தோளியர்களுடைய உதவும் திறனும் வேடுவ குலத்தினுடைய உறுதியான தன்மையும் வள்ளி முருகனால் ஆட்கொள்ளப்பட்டமையினையும் இவ் ஆய்வுக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** அமைப்பியல், வள்ளியம்மை, *கந்தபுராணம், வள்ளியம்மன் அம்மானை.*

**அறிமுகம்**

மட்டக்களப்புத் தமிழகம் என்பது பண்டைக் காலம் தொடக்கம் பரந்து விரிந்த நிலப்பிரப்பினைக் கொண்டிருந்தது என்பதனை வரலாற்றுச் சான்று மூலம் அறிகின்றோம். குறிப்பாகக் கிழக்குமாகாணம் பல பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது. தெற்கே குமுக்கன் ஆறு தொடக்கம் வடக்கே வெருகல் வரையும் நீண்டும், மேற்கே உன்னசகிரிவரையும் பரந்திருந்தமையினை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய பிரதேசத்தில் பண்டைய காலம் தொடக்கம் ஆலயவழிபாடுகள் இடம்பெற்றிருந்தமையினை இராவணனுடைய வரலாற்றின்மூலம் உறுதி செய்யமுடிகின்றது. காலப்போக்கில், மட்டக்களப்பின் கேந்திர நிலையினைக் கருத்தில் கொண்டு, பல அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றமையினை அறிகின்றோம். இராவணன் காலந்தொடக்கம் அந்த மாற்றம் படிப்படியாக ஏற்படுகின்றது. அதனைத் தொடர்ந்து குருகுலநாகரும் இணைந்து ஆட்சி நடத்துகின்றனர். பின்னர் அயோத்தி இரகுவம்சத்தைச்சேர்ந்த காளிசேனன் (காலசேனன்) படையெடுத்து இயக்க, நாகர்களை வென்று நாகரது இரண்டு முருகன் கோயில்களையும் இடித்து ஆட்சியைக் கைப்பற்றினான். (மட்டக்களப்பு மான்மியம் ப. 48) இராவணனைத் தொடர்ந்து உகந்தைக்கு அருகிலிருந்த நாகர்கள் முல்லைத்தீவு, மணற்றிடர், மன்னார் முதலான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர். இவனுடைய ஆட்சி நீட்சி பெற்ற காலத்தில்தான், விஜயன் இலங்கையை வந்தடைகின்றான். இவ்வாறாக இலங்கை இயக்கர், நாகர் குடிவழி அரசுகள், பரிதிகுல இரகுவம்சக் குடிவழி அரசுகள், கலிங்கர் குடிவழி அரசுகள், வங்கர் குடிவழி

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

அரசுகள், ஐரோப்பிய நாடுகளின் குடிவழி அரசுகள் என்று ஆட்சி இடம்பெறுகின்றது. தொடர்ந்து கண்டி மன்னர்களுடைய காலத்தில் அதன் செல்வாக்கு மேலும் வலுப்பெற்றிருந்தது. கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களகப்பு வன்னிமைகளுக்கும் இடையே இருந்த தொடர்பு பற்றிப் பல ஆதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. பின்னர் ஐரோப்பியரின் வருகையினைத் தொடர்ந்து பல மாற்றங்கள் எற்படுகின்றன.

இலங்கையில் ஆரம்பத்தில் சிவவணக்கம் இருந்துள்ளமையினை இங்குள்ள திருக்கோணேஸ்வரம், திருக்கோயில் போன்ற இடங்களில் உள்ள சிவலிங்கங்களை இராவணன் வழிபட்டதனூடாக அறிகின்றோம். அதேபோல் முருகனை வணங்கும் நிலையும் இருந்துள்ளது. மட்டக்களப்புத் தமிழகத்தில் திருப்படைக் கோயில்கள் இருந்தமையினை மட்டக்களப்பு சைவக்கோயில்கள் எனும் ஆதாரத்தின் ஊடாக அறிகின்றோம். இவற்றைவிடக் கதிர்காமத்தில் அமைந்துள்ள முருகனை இன்றுவரையும் இங்குள்ள மக்களில் அதிகமானவர்கள் சென்று வணங்குகின்றனர். இக்கோயிலில் பூசை புனக்காரங்களை தமிழர்கள் மேற்கொண்டு இருக்கின்றார்கள். இன்று வரையும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறாக முருகனை வணங்கும் நிலை மேலோங்கியதால் வள்ளியம்மனை வணங்கும் தன்மையும் மேலோங்கியது. வீ.சி.கந்தையா அவர்கள் மட்டக்களப்புத் தமிழகத்தில் கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயிலில் அன்று இடம்பெற்ற பூசைநடைமுறைகள் திருப்படைக்கோயில் பூசை நடைமுறைகளை ஒத்திருந்தது என்கின்றார். (ப.56) இவ்வாறான ஒரு நிலையில் அவதானித்தால் பண்டைக்காலமிருந்து முருகவழிபாடு நிலவியது மட்டுமன்றிப் பிரதான வழிபாடாகவும் இருந்து வந்துள்ளது. அதன் நிவிர்த்தம் ஏனைய வழிபாடுகளும் அதற்கேற்றாப்போல் இடம்பெற்றிருக்கின்றது. இந்த வகையில் சிவலிங்க வணக்கத்துடன் அமையப்பெற்ற திருக்கோயில் பிற்காலத்தில் சித்திரவேலாயுதர் கோயிலாக மாற்றம்பெறுகின்றது.

**அமைப்பியல் ஆய்வு**

உலகில் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் பல இடம்பெற்றுவருகின்றன. இத்தகைய ஆய்வுகளில் அமைப்பியல் ஆய்வும் சிறப்புறு ஆய்வாக அமையப்பெறுகின்றன. இத்தகைய அமைப்பியல் மொழியியல், இலக்கியத் திறனாய்வு, மானிடவியல் மற்றும் சமூகவியல், உளவியல் முதலான துறைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. எனினும், இத்தகைய முறையில் ஆய்வுகள் இடம்பெறுவது குறைவானதாகும். எனினும், கந்தபுராணம், வள்ளியம்மன் அம்மானை, வள்ளியம்மை கூத்து, வள்ளி தினைப்புனக் கரகம் அகிய இலக்கியங்களில் பாடுபொருளாக அமையப்பெறும் வள்ளியம்மை எனும் பாத்திரம் பற்றி அமைப்பியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றது. இந்த இலக்கியங்களில் வள்ளியின் பிறப்பு, வளர்ப்பு, தினைப்புனம் காத்தமை, முருகன் கிழப்பிராமண வடிவம் கொண்டமை, வேள்ளியை முரகன் ஆட்காண்டமை பற்றிய விடயங்கள் ஆராயப்படுகின்றன.

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

**அம்மானை**

அம்மானை என்பது மகளிர் ஆடும் விளையாட்டுக்களில் ஒன்று. இது இரண்டு அல்லது மூன்று பொண்கள் மரத்தால் ஆக்கப்பட்ட அம்மானைக் காய்களை மேலே எறிந்து அவை கீழே விழாமல் அவற்றில் ஒன்றைக் கழித்து அல்லது கூட்டிப் பிடிப்பதாக அமைந்த விளையாட்டாகும். இவ்விளையாட்டை ஆடுகையில் பாடப்படுபனவாக எழுந்தவை அம்மானைப்பாடல்கள். இவை காலப்போக்கில் பல்வேறு வகையான மாறுதல்பெற்று பயிலப்படுகின்றன. தொல்காப்பியரும் "பாட்டிடைக் கலந்த பொருளவாகி…" என்று பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுள்கள் பண்ணத்தி என்கின்றார். எனினும், முதன் முதலில் சிலப்பதிகாத்தின் அம்மானைவரி மூலம் அம்மானைக்குரிய பண்புகள் வெளிப்படுகின்றன. சிலப்பதிகாரம், திருவாசகம் ஆகிய இலக்கியங்களில் வருகின்ற அம்மானைப் பாடல்கள் ஐந்து மற்றும் ஆறு வரிகள் உடையனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு காலப்போக்கில் அம்மானைப் பாடல்கள் வரிமாற்றங்களுடன் காணப்பட்டு, இன்று எழுந்துள்ள அம்மானைகள் தொடர்ச்சியான வரிகளுடன் காணப்படுகின்றன. அத்தகைய தொடரில் இடையிடையே நான்கடி விருத்தங்களும் அமையப்பெறுகின்றன. பொதுவாகத் தமிழ்நாட்டில் எழுந்த அம்மானைப் பாடல்களுக்கும் மட்டக்களப்பில் எழுந்த அம்மானைப் பாடல்னகளுக்குமிடையே வித்தியாசம் காணப்படுகின்றன. இன்று மட்டக்களப்புத் தமிழகத்தில் பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை முதலிய அம்மானைகள் ஆலயங்களில் பயிலப்படுவதோடு, வைகுந்த அம்மானை மரண வீடுகளில் பாடப்படுகின்றது. இந்த அம்மானைகள் ஆன்மவிடுதலையினை நோக்கியே பாடப்படுகின்றன.

**வள்ளியம்மையின் கதைச் சுருக்கம்**

வள்ளியம்மை வரலாறு பற்றி கந்தபுராணம், வள்ளியம்மன் அம்மானை, வள்ளியம்மை கூத்து, வள்ளி தினைப்புனக் கரகம் என்பன முன்வைக்கின்றன. இந்த இலக்கியங்களின் உருவத்தில் பெரிதான மாற்றம் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், அதன் உள்ளடக்கத்தில் சிறிய சிறிய வேறுபாடு காணப்படவே செய்கின்றன.

***கந்தபுராணம்***

வள்ளியினுடைய பிறப்புப் பற்றிய உள்ளடக்கம் கந்தபுராணத்தில் வருகின்றது. கந்தபுராணம் முருகனைப் பற்றிப் பாட, தமிழில் எழுந்த முதற்புராணமாகும். இப்புராணம் ஆறு சம்கிதைகளையும் ஐம்பது காண்டங்களை உடையது. அவை சுதைகுமார சம்கிதை, சூத சம்கிதை, பிரம்ம சம்பிதை, விஸ்ணு சம்கிதை, சங்கர சம்கிதை, சூர சம்கிதை என்பன. சங்கர சம்கிதையில் முப்பதினாயிரம் சுலோகங்களும் பன்னிரெண்டு காண்டங்களும் உள்ளன. அவற்றுள் முதன்மையானது சிவரகசியகாண்டம் இது பதின்மூவாயிரம் சுலோகங்களையும், உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தசக்ஷ காண்டம், உபதேச காண்டம் என்று ஏழு காண்டங்களையும் கொண்டது.

தேவகாண்டத்தில் வள்ளி திருமணம் எனும் படலத்தில் வள்ளியம்மன் அம்மானைக்கான உள்ளீடுகள் பெறப்பட்டுளமையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. திருமாலின் திருநயணங்களிலிருந்து அமிர்தவல்லி, சுந்தரவல்லி எனும் இருவரும் தோன்றுகின்றனர். இவர்கள் முருகனை அடைவதற்காகச் சரவணப்பொய்கைக்கு அருகில் தவம் செய்கின்றனர். தவத்தின் வலிமை அறிந்த முருகன் அங்கு வந்து, அமிர்தவல்லியைத் தெய்வேந்திரன் மகளாக வளர்ந்து வருமாறு கூறி, உரியகாலம் வரும்போது மணந்துகொள்வதாகவும் அருள்பாலித்தார். அவ்வாறே சுந்தரவல்லியிடம், சிவமுனிவன் குழந்தையாகி, வேடுவர் குலத்தில் வளர்ந்து, தன்னை மணம்புரியக் காத்திருக்குமாறும் பணித்தார்.

கால நீட்சியில் வள்ளிமலையில் சிவன் எனும் முனிவர் தவமியற்றி வந்தார். அவரெதிரில் அழகிய பெண்மான் ஒன்று வந்தது. அந்த மானைக் கண்டு முனிவர் மோகம்கொள்ள, அந்த மான் கருவுற்று ஒரு பெண்மகவை ஈன்றது. காட்டில் வள்ளிக்கொடிகளுக்கிடையே தோன்றிய அந்தக் குழந்தையினை வேடுவர் தலைவன் கண்டெடுத்து, தனது மனைவியிடம் கொடுக்கின்றான். மிக்க மகிழ்ச்சியுடன் அந்தக் குழந்தையினை அவர்கள் வளர்த்து வருகின்றனர். தக்க வயது வந்ததும் வேடர்குல மரபுப்படி தினைப்புனம் காப்பதற்கு அவளை அனுப்புகின்றனர். தினைப்புனத்தில் நாரதர் வள்ளியை கண்டு அவள் அழகை முருகனிடம் பலவாறு சொல்லி திருமணத்துக்கான ஏற்பாட்டினைச் செய்கின்றார். முருகன் வேட்டைக்கு வந்து வேடுவனாக வள்ளிமுன் தோன்றி, அவளைப் பற்றிய விவரங்களைக் கேட்டு தன் தாகத்தைத் தீர்க்குமாறு வேண்கின்றார். அப்போது, வேடுவ தலைவன் அங்குவர வள்ளி அச்சமுறுகின்றாள். அந்தவேளை முருகன் வேங்கை மரமாக நிற்கின்றார். அங்குவந்த வேடுவர்கள் புதிதாகத் தோன்றிய அம்மரத்தை வெட்டமுனைந்த போது வேடுவ தலைவன் தடுத்கின்றான். இந்த மரம் வள்ளிக்கு குளிர்மையாக இருக்க உதவும் என்று சொல்லி அங்கிருந்து செல்கின்றனர். காடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வேடுவர்கள் மீண்டும் வந்தபோது முருகன் ஒரு கிழவர் வடிவில் அவர்கள் முன் தோன்றினார். சிவப்பழமாய்த் தோன்றிய முருகனை வேடுவதலைவன் வணங்க, முருகன் விபூதி அணிந்து ஆசிகூறினார். கிழவன் வருகையை கேட்டறிந்த வேடுவதலைவன் அவர் விருப்பப்படி வேடமலையில் உள்ள குமரித் தீர்த்தத்தில் நீராடி வள்ளிக்குத் துணையாக இருக்கும்படி கூறுகின்றார்.

வள்ளி கொடுத்த தேனும் தினைமாவையும் உண்ட முருகன் நீர் வேட்கை தனியத் தண்ணீர் கேட்டார். அவள் கிழவனிடம் இங்கிருந்து ஏழுமலை தாண்டிச் சென்றால் தண்ணீர் கிடைக்குமென்று கூற, அவளையும் துணைக்கு அழைத்துக்கொண்டு அங்கு செல்கின்றார். நீரைக்காட்டி தாகம் தீரும்வரை பருகுமாறுகூறி கரையில் நிற்கின்றாள். சிறிது நேரம் கழிந்து, இப்பொழுது எனக்கு நீர் வேட்கை தீர்ந்ததென்றும், ஆனால், அப்போது ஏற்பட்ட மோகதாகத்தைத் தணிக்குமாறு வள்ளியை வேண்டினார். அதற்கு வள்ளி இயைய மறுத்து, வேடுவர்களால் ஆபத்து ஏற்படும் என்று கூறி, இருப்பிடம் நோக்கிச் செல்லப் புறப்பட்டாள்.

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

அப்போது முருகன் அண்ணன் கணபதியை நினைக்க, அவர் முரட்டு யானையாக வள்ளிமுன் தோன்றினார். அதனைக் கண்ட வள்ளி அஞ்சி முருகனின் பக்கம் ஓடிவந்து, தன்னைக் காக்கும்படியும் தனது சொல்லுக்கு இசைவேன் என்றும் கூறினாள். அப்போது யானையும் சென்றுவிடவே வள்ளிக்குத் தனது சுயரூபத்தைக் காட்டுகின்றார்.

வள்ளி தினைப்புனம் வந்ததும் அவளுடைய உடலில் ஏற்பட்ட மாற்றம் பற்றி தோழியர்கள் விசாரிக்கின்றனர். இந்த வேளையில் முருகன் மீண்டும் வேடவடிவில் அங்கு வந்து அந்தப் பக்கம் அம்பால் அடிபட்ட யானையைக் கண்டீர்களா என விசாரிக்கின்றார். அந்த வேளையில் வள்ளியின் கண்களும், அந்த வேடனின் கண்களும் ஒன்றினைந்தமையினை அவதானித்தனர். பின்னர், வள்ளியைச் சேர்த்துவைக்குமாறு வேடனாக வந்த முருகன் வேண்டுகின்றான். இதற்கு இயைந்த தோழி வேடுவர்கள் கண்ணில் பட்டால் ஆபத்து நேரும் என்று கூறுகின்றார்கள். எனினும், அவர்கள் பக்கத்தில் உள்ள சோலையில் சந்தித்து அளவலாவி மகிழ்ந்தனர். பின்னர் அங்குவந்த தோழி வள்ளியைப் பிரித்துச் செல்கின்றாள். தினைகள் முற்றிவிட தினைப்புனக் காவலும் முடிவுபெற்றது. வள்ளியும் தோழியும் வீட்டை அடைந்தனர். வள்ளியினுடைய உடலில் மாற்றங்கண்ட பெற்றோர்கள் வள்ளிக்கும் முருகனுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி அறிந்து கொண்டனர்.

வள்ளியின் வீட்டின் பின்புறத்தில் அன்றிரவு முருகன் வந்து காத்திருந்தார். அவரிடம் தோழியர் வள்ளியை ஒப்படைக்கின்றனர். அன்றிரவை மகிழ்ச்சியுடன் கழித்த அவர்கள், விடியற்காலை தலைமறைவாகின்றனர். அங்கு வள்ளியைக் காணாமல் வேடுவர்கள் தேடுகின்றனர். பின்னர் வள்ளி முருகனுடன் இருக்கும் இடமறிந்து அவ்விடம் செல்கின்றனர். அங்கு சென்றதும் இருவருக்கும் சண்டை இடம்பெறுகின்றது. வேடுவர்கள் பாணங்கள் எய்தனர். அப்போது ஆறுமுகன் சேவலை நினைக்க, அது அங்கு வந்து பயங்கரமாய்க் கத்தியது. அனைவரும் அஞ்சி ஓடினார். சிலர் மயங்கி வீழ்ந்தனர், வள்ளியின் தந்தையும் வீழ்ந்துகிடந்தார். அப்போது அங்குவந்த நாரதர் அனைவரையும் எழுப்பும்படி கூறி வள்ளியை முறைப்படி திருமணம் செய்துகொள்ளுமாறும் பிராத்தித்தார். அவ்வாறே முருகன் அனைவரையும் ஒரே பார்வையால் எழுப்பி, தனது ஆறுமுகத்துடன் காட்சியளித்தார். பின்னர் முருகன் - வள்ளி திருமணம் இடம்பெற்றது. திருமணத்திற்கு பார்வதி பரமேஸ்பரரும் வந்திருந்தார். அத்தோடு இந்திராதி தேவர்களும் மலர்மாலை பொழிந்தனர். பின்னர் முருகன் பரமனை வழிபட்டு அருளைப்பெற்று வள்ளியுடன் கந்தகிரியை அடைந்தார். தெய்வானை, வள்ளியையும் முருகனையும் அன்புடன் வரவேற்று தனக்கு ஒரு துணைகிடைத்திருப்பதாக மனம் மகிழ்ந்தார்.

***வள்ளியம்மன் அம்மானை***

தேவலேகத்தில் தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இருக்கின்றனர். விஷ்ணுவும் அந்த இடத்தில் இருக்கின்றார். விபூதை என்ற பெண்ணொருத்தி ஆயனுடைய அழகுகண்டு மயங்குகின்றாள். இவள் பூங்காவனத்தில் இருந்த காலத்தில் மின்னாள் பிறக்கின்றாள். (வள்ளி)

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

அவள் வளர்ந்துவரும் காலத்தில் ஆறுமுகன் மேலே ஆசை கொண்டு, அவரை அடைவதற்காக அரியதவம் செய்கின்றாள். தவத்தின் வலிமை அறிந்து அவ்விடம் சென்ற முருகன் "நான் இந்தப் பிறவியில் உன்னை மணக்கமுடியாது. ஏற்கனவே திருமணம் செய்துள்ளேன். அதனால், அடுத்த பிறவியில் நீ பிறந்தால் உன்னை மணப்பேன்" என்று வாக்குக் கொடுக்கின்றார். அவளும், அதற்கு, "எந்தப் பிறப்பானாலும் என்னை நீ மணந்துகொள்" என்று, முருகன் வாக்கினை ஏற்றுக்கொண்டு தவத்தினை நிறைவு செய்கின்றாள். பின்னர் முருகன் 'நீ மானின் வயிற்றில் பிறப்பாய்' என்று வரங்கொடுத்து மறைகின்றார். கலைக்கோட்டுமாமுனி என்பவர் தவம் செய்து கொண்டு இருக்கும்போது, கன்னி இளம்மான் ஒன்று துள்ளிவருகின்றது. அதனைக் கண்டு அதன்மேலே ஆசைகொள்கின்றார். அந்த மானைப் பார்த்த மாத்திரத்திதே அவ்மான் கருக்கொள்கின்றது. கருக்கொண்ட மான் வள்ளிக்குளியருகே வந்து கன்றை ஈன்று, அந்த இடத்தைவிட்டு நீங்கிச் செல்கின்றது. அப்போது அந்தக் குழந்தைதனை பூமாது எடுத்து தேனமிர்து கொடுத்து சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்றாள். இவ்வாறு செல்லுகையில் அந்த வழியால் மிருகவேட்டை முடித்துக்கொண்டு குறவர்களும் குறத்திகளும் தங்களுடைய வாழ்விடத்துக்குப் போவதற்கு வருகின்றவேளையில், வாவிச்சுனை அருகே குழந்தை அழுகின்ற சத்தத்தை உணர்து. அதிசயத்தோடு அங்கு செல்கின்றனர். அவ்விடம் சென்ற அவர்களுக்கு இந்தக் குழந்தை கிடைக்கின்றது. அக்குழந்தைதனை மிக்க சந்தோசத்துடன் எடுத்து வளர்க்கின்றனர்.

**வள்ளியம்மை கூத்து**

கிருஷ்ணரும் அவர் மனைவியும் கானகத்தில் இயற்கையினைத் தரிசிக்கின்றனர். அப்போது ஒரு ஆண் மானும் பெண்மானும் புணரும் நிலையினை அவதானித்த லெட்சுமி, தானும் அவ்வாறிருக்க விஷ்ணுவை வேண்டுகின்றாள். அதனை ஏற்ற விஷ்ணு, தான் ஆண் மானாகவும் லெட்சுமி பெண்மானாகவும் உருவங்கொண்டு புணருகின்றனர். அப்போது அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கின்றது. அதனை விஷ்ணு காட்டில் விட்டுச் செல்ல நினைத்தபோது லெட்சுமி அனை விரும்பவ்விலை. அதற்கு விஷ்ணு 'சுப்பிரமணியக் கடவுள் கிருபையில் இந்தக் குழந்தை பிறந்தது' என்றும் அதனை இன்னும் சில நிமிடங்களில் வேடுவர்கள் வந்து எடுத்துச் செல்வார்கள் என்றும் கூறிச் செல்கின்றனர். அப்போது வேடுவர்கள் காட்டில் வேட்டையாடு வதற்காக வருகின்றனர். அப்போது அந்த வள்ளிக்குளியில் கிடந்த குழந்தையினை எடுத்து வளர்க்கின்றனர்.

**வள்ளி தினைப்புனக் கரகம்**

வேல்நம்பி, தங்கரூபன் முதலிய வேடுவர்கள் வேட்டை ஆடுவதற்காக வெள்ளி மலையருகில் சென்றனர். அங்கு வள்ளிக்குழி அருகே ஒரு குழந்தை அழுது கிடந்ததனைக் கண்டு அதனை எடுத்து வளர்த்துள்ளனர்.

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

**அமைப்பியல் கூறுகள்**

வள்ளியம்மையின் பாத்திரத்தை அமைப்பியல் கூறுகளின் வழி ஆராயப்படும்போது பல்வேறு தன்மைகளில் அதனை முன்கொண்டுசெல்லமுடியும்.

**இருமைக் கூறுகள்**

ஒரு பிரதியில் இருமைக்கூறுகள் இடம்பெறுகின்றபோது அப்பிரதி சிறப்புறு தன்மையில் அமைகின்றன. ஒரு கட்டமைப்பிற்குள் பொருளை உருவாக்குகின்றன வள்ளியம்மையின் கதையில் பல்வேறு இருமைக்கூறுகள் காணப்படுகின்றன.

**வள்ளி எதிர் தெய்வானை**

இந்த இரண்டு பாத்திரங்களும் பண்பாட்டுத்தளத்தில் பெரிதும் பேசுபொருளாக அமைந்துகிடக்கின்றன. வேடுவகுலத்தில் பிறந்த வள்ளியும் இந்திரனின் மகளாகப் பிறந்த தெய்வானையும் இருபெரும் ஆளுமைகள். இந்த இரண்டு பாத்திரங்களின் வழி முருகப்பெருமான் ஆன்மாக்களுக்கு அருள் பாலிப்பதனையே முதன்மைப்படுத்துகின்றது. அதாவது, முருகப்பெருமானை மனதார நேசிக்கும் ஆன்மாக்கள் எந்த லோகத்தில் இருந்தாலும் அவனுடைய அருள் சமமாகவே கிடைக்கும் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது வள்ளி பூலோகத்தில் இருந்தாலும் தெய்வானை தேவலோகத்தில் இருந்தாலும் முருகனுடைய ஞானப்பார்வை பொதுவானதாகவே இருக்கும்.

**இயற்கை எதிர் பண்பாடு**

இந்த இரண்டும் முக்கிய கூறுகளாகும். பண்பாடு, நாகரிகம் என்ற சொற்கள் தமிழர் மரபில் குவியமாகின்றது. குறிப்பாக வேடுவ குலத்தில் வளர்ந்த வள்ளியினுடைய வாழ்வு என்பது முற்றிலும் இயற்கையோடு இணைந்தது. வள்ளிக் குழியில் பிறந்த அவளுடைய வாழ்வு மலைச்சாரலிலும், தினைப்புனத்திலுமாக முன்கொண்டு செல்லப்படுகின்றது. இத்தகைய இயற்கைச்சூழல் அக்காலப் பண்பாட்டின் தன்மையினை அடையாளப்படுத்தகின்றது. ஆனால், அதற்கு எதிராக உயரிய பண்பாடு தெய்வானையின் மூலம் காட்டப்படுகின்றது. அதாவது, தெய்வானை தேவலோகத்தில் பிறந்து, அங்கே வாழ்ந்து, முருகனைத் திருமணம் செய்து தனது வாழ்வினை நிறைவு செய்கின்றாள்.

**காதல் திருமணம் எதிர் மரபுவழித் திருமணம்**

இந்த இரண்டு திருமணங்களும் தமிழர் பண்பாட்டில் மேலெழுகின்றன. இதனைச் சங்க இலக்கியம் களவு ஒழுக்கம் கற்பொழுக்கம் என்கின்றது. தலைவனுக்குத் தலைவிக்கும் இடையே ஆரம்பத்தில் களவு ஒழுக்கமே இடம்பெறும். இதனை முதலில் தோழியைத் தவிர மற்றவர்கள் அறியமாட்டார்கள். பின்னர் வீட்டில் உள்ளவர்கள் அதனை அறியும்போது அது கற்பொழுக்கமாக பின்பற்றப்பட்டு, இருவருக்கும் திருமணம் நடத்திவைக்கப்படும். இந்த இரண்டு ஒழுக்கமும் தமிழர் சமுதாய அமைப்பில் பின்பற்றப்பட்டு வருகின்றன. தேவலோகத்தில் முருகன் கொடுத்த வரத்திற்கு ஏற்ப பூலோகத்தில் வள்ளியினைத் திருமணம்

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

செய்கின்றார். இந்தத் திருமணம் வீட்டாருடைய சம்மதத்துடனே இடம்பெறுகின்றது. இதற்காக அவர்பட்ட துன்பங்கள் பல. ஆனால், கந்தபுராணத்தில், பத்மாசூரனை முருகப்பெருமான் வெற்றிகொண்டு தேவர்களைக் காத்தமைக்காக, தேவர்களின் தலைவனாகிய இந்திரன் தனது மகள் தேவையானையினை முருகனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றார்.

**இச்சா சக்தி எதிர் கிரியா சக்தி**

முருகனுக்கு மூன்று சக்திகள் உண்டு என்கின்றது கந்தபுராணம். அதில் இச்சா சக்தியாக வள்ளியும் கிரியா சக்தியாக தெய்வானையும் ஞானா சக்தியாக உமையம்மை முருகனுக்கு கொடுத்த வேலும் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக நோக்கினால் வேலும் தாயாகவே நிற்பதனால் இந்தச் சக்திகள் யாவும் பெண்ணால் மேற்கிழம்பகின்றமையினை அறியமுடிகின்றது.

**காதலன் எதிர் கடவுள்**

நாதரருடைய தகவலைப்பெற்று தினைப்புனம் சென்ற முருகனுக்கும் வள்ளிக்கும் இடையில் காதல் இடம்பெறுகின்றது. முதலில் முருகன் செய்கின்ற காதல் ஒருதலைக்காதலாகவே காட்டப்படுகின்றது. வள்ளியை இலகுவாக அடையமுடியும் என்ற எண்ணப்பாட்டில் முருகன் முயற்சிகளை மேற்கொண்டாலும் அது மிகவும் இறுக்கமாகவே இருந்தது. வள்ளியை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்பதற்காக வேடுவனாகவும் கிழப்பிராமணனாகவும், வேங்கை மரமாகவும் தன்னை மாற்றிக் கொள்கின்றார். சைவசித்தாந்தத்தின்படி கடவுள் நேரடியாக ஆன்மாக்களுக்குக் காட்சி கொடுக்கமாட்டார். ஆனால், அவர் பல்வேறு வேடங்களில் அருள்கொடுப்பார் என்பதற்கு ஏற்ப இவ்வாறான வேடங்களை அவர் எடுத்துள்ளார். எனினும், மனிதர்கள் இதனை அறியமாட்டார்கள். அறியும்போது அவர் இறையின்பம் பெற்றுவிடுவார். எனவேதான் தனது தெய்வீக சக்தியை இங்கு முழுமையாக முருகன் பயன்படுத்துகின்றார்.

**மனிதன் எதிர் தெய்வம்**

ஒரு சாதாரண வேடர் குலப்பெண் தெய்வமாகின்றமை பண்பாட்டுத்தளத்தில் பேசுபொருளாகின்றது. இது மனிதனும் தெய்வமாகலாம் என்பதற்கான நீட்சியில் நிற்கின்றது. முருகன் தனது தெய்வீக சக்தியால் மனிதவடிவு கொண்டு வள்ளியினை ஆட்கொள்ளுகின்றார். வள்ளி அவளை ஆட்கொள்ளவேண்டும் என்பது முருகனுக்கு இருக்கும் கடப்பாடு. எனவே மனிதனாகிய ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலக்கும் என்பதனைக் காட்டுகின்றது.

**நாரதர் எதிர் முருகன்**

சர்வலோகங்களையும் சஞ்சாரம் செய்துகொண்டு பூலோகத்திற்கு வருகின்றார். அப்போது தினைப்புனத்தில் வள்ளியினைச் சந்தித்து உரையாடி அங்கிருந்து முருகன் இருக்கும் இடத்திற்குச் சென்று வள்ளியின் அழகு பற்றிக் கூறுகின்றார். இதனைச் செவிமடுத்த முருகனுக்குக் காதல் இன்பம் பெருகுகின்றது. அவர் அங்கிருந்து வேடுவ வடிவு கொண்டு

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

புறப்பட்டு வள்ளி இருக்கும் தினைப்புனத்தினை அடைகின்றார். அங்கு சென்றதும் வள்ளியுடன் பல்வேறு நிலைகளில் உரையாடுகின்றார். எனவே, நாரதர் துணையுடன் வள்ளியினை அறிந்துகொள்ளும் நிலை உருவாகின்றது.

**வேடுவர்கள் எதிர் முருகன்**

வள்ளி தினைப்புனம் காக்கும் இடத்திற்கு வந்த முருகன், அவளுடன் பல்வேறு வாத விவாதங்களில் ஈடுபடுகின்றார். அப்போது வேடுவர்கள் அந்த இடத்திற்கு வருகின்றனர். இந்த நிலையில் வள்ளிக்குப் பயம் உண்டாகின்றது. இந்த வேடன் இங்கிருப்பதனைக் கண்டார்கள் என்றால் இவரைக் கொன்று விடுவார்கள் என்று அவளுக்குப் பயம் மேலிடுகின்றது. ஆனால், முருகனோ வேங்கைமரமாகிவிடுகின்றார். வேங்கை மரம் நிற்பதனைக் கண்ட அவர்கள் அதனை வெட்டுவதற்கு முனைந்தபோதும், பின்னர் அது கைவிடப்படுகின்றது. மேலும் இன்னுமோர் சந்தர்ப்பத்தில், வேடுவர்களைக் கண்ட முருகன் கிழப்பிராமணராக மாறிவிடுகின்றார். இறுதியாக வள்ளியை முருகன் கவர்ந்து சென்றுவிடுகின்றார். அவ்வேளை அவர்கள் பல இடங்களில் இவர்களைத் தேடி, அவர்கள் காட்டில் மறைந்திருப்பதனை அறிந்து அங்கு சென்றபோது முருகனுக்கும் வேடுவர்களுக்கும் சண்டை இடம்பெறுகின்றது. இந்தப்போரில் வேடுவர்கள் அனைவரும் இறந்துவிடுகின்றனர். பின்னர் வள்ளி முருகனை வேண்டிக் கொண்டதற்கேற்ப எல்லோரும் உயிர்பெற்று எழுந்துவிடுகின்றனர்.

**விநாயகர் எதிர் முருகன்**

வள்ளியினை அடைவதற்காகப் பல்வேறு முனைப்புக்களை மேற்கொண்டபோதும் அந்த முனைப்புக்கள் யாவும் செயலற்றதாகவே இருந்தது. இவ்வாறான நிலையில் தனது அண்ணணாகிய கணபதியை நினைத்தபோது அவர் யானை வடிவுகொண்டு வருகின்றார். அதனைக் கண்டு பயந்த வள்ளி, முருகனிடம் இயல்பாகவே அணைந்து கொள்கின்றார். அப்போது முருகன் தனது சுயவடிவத்தைக் காட்டுகின்றார்.

**கதை சொல்லும் முறை**

கற்பித்தல் கற்றலை இலகுவாக முன்கொண்டு செல்லும் முறை கதைசொல்லும் முறையாகும். இதனை விளாடிமிர் ப்ராப் போன்ற அமைப்பியல் அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். ஒரு கதையின் மையமாக இயங்குவது அக்கதையில் வரும் பாத்திரப்படைப்புக்களே. அப்பாத்திரங்கள் குறிப்பிட்ட பணிகளை நிறைவு செய்கின்றன என்பதனை, வள்ளியம்மை தொடர்பாக எழுந்துள்ள இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

**பொருள்**

வள்ளியம்மை தொடர்பாக எழுந்த இலக்கியங்களில் மையப்பொருளாக இயங்குவது வள்ளி பற்றிய கதையாகும். தேவலோகத்தில் முருகன் வள்ளிக்குக்கொடுத்த வாக்கின்படி, அவளை அடையவேண்டியவராக இருக்கின்றார். அதன்படி அவர் வள்ளியாகிய ஆன்மாவினை ஆட்கொள்கின்றார்.

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

**உதவுபவர்**

வள்ளியினை அடைவதற்கா முருகனுக்கு நாரதரும் வள்ளியின் தோழிகளும் உதவுகின்றனர். தினைப்புனத்தில் வள்ளியைச் சந்தித்த விடயத்தினை நாரதர் முருகனுக்குத் தெளிவுபடுத்துகின்றார். முருகன் தனது சுய உருவத்தினைக் காட்டிய காலத்தில் தினை அறுக்கப்படுகின்றது. அப்போது வள்ளி தனது ஊரான சிற்றூர்க்குச் செல்லுகின்றாள். அவ்வேளையில் முருகன் வள்ளியைக் காணாமல் அலைந்து திரிகின்றபோது, வள்ளி இருக்கும் இடத்தினைத் முருகனுக்கு அவர்கள் தெரிவிக்கின்றனர். பொதுவாக இந்தப் பாத்திரங்கள் முருகன் வள்ளியை அடைவதற்கு மறைமுகமாக உதவுகின்றன.

**சோதனைகள்**

முருகன் வள்ளிக்கடையே உள்ள காதல் உறவினை குடும்பத்தார் அறிந்தபோது இயல்பாகவே எதிர்ப்புக் கிழம்புகின்றது. வள்ளியினுடைய அண்ணன்மார் இந்த உறவுமுறையினை கடுமையாக முறையில் எதிர்க்கின்றனர். முருகனுடன் சண்டை செய்யுமளவுக்கு அவர்களுடைய எதிர்ப்பு மேலொங்குகின்றது. இந்த நிலை பெரும் துன்பத்தினையும் சோதனையினையும் ஏற்படுத்துகின்றது. மேலும், தினைப்புனத்தில் இருந்த காலத்தில் முருகன் வேடுவடிவம், வேங்கைமரம், கிழப்பிராமணவடிவம் என்பவற்றை மேற்கொள்கின்றார். இந்த வடிவங்களை மேற்கொண்டிருக்காவிட்டால் வேடுவர்கள் முருகனைக் கொன்றிருப்பார்கள் என்று வள்ளி நினைக்கும் அளவுக்கு அவளுடைய மனோதுன்பம் மேலோங்குகின்றது.

**வெற்றி / ஒன்றிணைதல்**

வள்ளியை அடையவெண்டும் என்ற நிலையில் முருகன் பல்வேறு தடைகளை உடைக்கின்றார். முதலில் வேடுவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றுதல், அண்ணன் கணபதியின் உதவியை நாடுதல், வேடுவர்களுடன் போர் செய்தல் என்று பல்வேறு தடைகள் தாண்டப்படுகின்றன. இறுதியில் தெய்வானையினையும் ஏற்கச்செய்யும் அளவுக்கு அவருடைய முயற்சி முன்கொண்டுசெல்லப்படுகின்றது.

**உறவு முறைகளின் அமைப்பு - முருகன் – வள்ளி**

வள்ளியம்மை குறித்து எழுந்த இலக்கியங்களின் மையமாக விளங்குவது உறவுமுறையாகும். மானிட உறவில் குவியமாகி வள்ளியம்மையினுடைய வரலாறு தெய்வீகக் காதலாக மலர்ந்து, பக்தி மேலெழுகின்றது. பக்தியினை மேம்பட்டநிலையில் கொண்டுவரவேண்டுமாக இருந்தால் அர்ப்பணிப்பு அவசியமாகும். இங்கு முருகனும் வள்ளியும் ஒருவகையில் மேற்கொண்ட அற்பணிப்பே உறவின் நிலையான தன்மையினைக் கொண்டுவருகின்றது.

**முருகன் - வள்ளி – தெய்வானை**

முருகன், வள்ளி, தெய்வானை எனும் அமைப்பு சமூகத்தில் உள்ள இனச்

சமநிலையினையே எடுத்துக்காட்டுகின்றது. சாதி, மத, பேதமற்ற நிலையில் மனித இனம் ஒன்றாகும்போது அசைக்கமுடியாத சக்தியை உண்டாக்கும் என்பதனை இத்தொடர்பு மேம்படுத்தகின்றது. உயர்ந்த குலத்தில் உள்ள தெய்வானையினையோ வேடுவ குலத்தின் வள்ளியேயோ இங்கு அடையாளப்படுத்தாமல் இனத்தின் மேன்மையினையே அடையாளப்படுத்துகின்றது. அதாவது, முருகனின் ஆளுமையும் அவர் பக்தர்களை அரவனைத்துச் செல்லும் தன்மையும் காட்டப்படுகின்றது.

**வள்ளி - நம்பிராஜன்**

பக்தியும் தொண்டும் சமூகத்தின் இறுக்கமான கட்டுமானத்தை உடைத்தெறிவதோடு சமநிலையினையும் உண்டுபண்ணும் என்பதற்கு இந்த இலக்கியங்கள் சான்றாகின்றன. வள்ளி மானின் வயிற்றில் பிறந்து வேடுவர்களின் அரவணைப்பில் வாழ்கின்றார். அவ்வாறு அடித்தட்டு மக்களையும் அதன் கலாசாரத்தையும் தெய்வீக வரம்பிற்குள் கொண்டுவருகின்றார்.

**குறியீட்டு அர்த்தங்கள்**

கதையில் வரும் சில கூறுகள் ஆழமான குறியீட்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளன.

**வள்ளிக்கிழங்கு**

வள்ளிக்கிழங்கு தோன்றும் குழியில் இருந்து வள்ளியம்மை கண்டெடுக்கப்பட்டிருக்கின்றாள் என்பது இவ் இலங்கியங்களின் வழி காட்டப்படுகின்றது. அவ்வாறாயின் இது இயற்கையின் ஆதி சக்தியையும் வளங்கொண்ட பூமியினையும் குறியீடாக்குகின்றது.

**தினைப்புனம்**

செயற்பாடு ஒன்று இடம்பெறுவதற்கு சிறந்த களம் அவசியமாகின்றது. இதற்காக மனித நடமாட்டம் இல்லாத தினைப்புனம் களமாகின்றது. இக்களத்தில் வள்ளிமட்டுமே இருக்கின்றாள். அதனால் முருகனுடைய காதல் இயல்பாகவே மலர்கின்றது. இவ்வாறு மலரும் காதலாள் மானிடக்காதல் தெய்வீக் காதலாக மாறுகின்றது. எனவே தெய்வீகத்தன்மையும் பத்தியும் வெளிப்படும் இடமாக தினைப்புனம் அமைகின்றது.

**வேடர் குலம்**

உலகில் தோன்றிய ஆதிக்குடிகளின் வழியிலே இன்றைய சமூக் கட்டமைப்பு உள்ளது என்பர். குறிப்பாக ஆதிக்குடிகளாக்கொள்ளப்படும் வேடுவர்களின் வாழ்வியல் அவர்களது சமய வழிபாட்டு முறைகள் பெருநெறி சமயத்துடன் இணையும் விதத்தையும் குறிக்கிறது.

**சுனை**

வளம் பொருந்திய நாடு அங்குள்ள கடல், ஆறு, குளம், சுனைகளினால் காட்டப்படும். மலையும் மலைசார்ந்த இடமாகிய சிற்றூரில் சுனைகள் ஓடுவதனால் அந்த இடம் விளைச்சல் நிலமாகக் காட்டப்படுகின்றது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X



**யானை**

மனிதனுக்கும் மிருகத்துக்குமுள்ள உறவு மேம்படுவதனால் உயிர்களை நேசித்தல் பண்பு மேலோங்குகின்றது. இங்கு யானை காட்டப்படுவதனால் அது ஒரு, காடும் காடு சார்ந்த முல்லை நிலமாக நிற்கின்றது.

**வேங்கை மரம்**

இலையுதிர் தாவரங்களில் ஒன்றாகிய வேங்கை மரம் சுற்றுச் சூழலில் உள்ள வெப்பத்தைக் கட்டுக்குள் கொண்டுவரும் தன்மை கொண்டது. எனவே, தினைப்புனம் காவல் காக்கும் இடம் வெப்பமான தன்மையுடன் இருந்தமையினை இது காட்டுகின்றது.

**வேடுவ வடிவு**

மனிதர்களுக்குமுக்கியத்துவம் இங்கு காட்டப்படுகின்றது. பழக்கப்பட்ட மாட்டைக்கொண்டே மற்றைய மாட்டைப்பிடிப்பதுபோல், வேடுவ இனத்தில் வளர்ந்த வள்ளியை அடைவதற்கு, அதே இனத்தினை ஒத்த தன்மை அவசியம் என்பதனை இந்த வடிவம் காட்டுகின்றது.

**கிழப்பிராமண வடிவம்**

முதியவர்களுக்கு மதிப்புக்கொடுப்பது மட்டுமன்றி, இறைதன்மையினையும் மதிக்கும் பண்பினை இப்பாத்திரம் வெளிப்படுத்தகின்றது.

**செட்டி**

அக்கால பண்பாட்டுத்தளத்தில் தங்கம் அதிகமாக இருந்தமையினையும், அது செட்டிகளின் பின்புலத்தில் கொண்டு செல்லப்பட்டமையினையும் காட்டுகின்றதோடு, பெண்கள் தங்கத்தின் மீது விருப்பம் கொண்டிருந்தமையினையும் அடையாளப்படுத்துகின்றது.

**தினை**

வேளாண்மைச் செய்கையில் அல்லது பயிர் மகாமைத்துவத்தில் சேனைப்பயிர் அதிகம் செய்கை பண்ணப்பட்டிருக்கின்றது. மக்களது பிராதன உணவாகத் திணைச்சோறு பயன்படுத்தப் பட்டிருக்கின்றமையினை இது காட்டுகின்றது.

**கவுண்**

சேனைப் பயிர்ச் செய்கை அதிகம் இடம்பெறுகின்றமையினையும் அதனை மிருகங்களிடமிருந்தும் பறவைகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும் என்பதக் காட்டுகின்றது.

**அடிப்படை அமைப்பு மற்றும் செய்தி**

வள்ளியம்மையின் கதையின் அடிப்படை அமைப்பானது பெரும்பாலும் பின்வரும் வரிசையில் அமைகிறது.

**விருப்பம்**

நாரதர் வாயிலாக வள்ளியினுடைய அழகினையும் அவள் இருக்கும் இடத்தினையும்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

அறிந்து, தினைப்புனம் வந்த முருகன் அவள்மீது காதல் கொள்கின்றார். இந்தக் காதலானது தெய்வீக்காதலாக மாற்றம்பெறுகின்றது.

**சோதனைகள் / திருவிளையாடல்கள்**

வள்ளியின் அன்பைச் சோதிப்பதற்காக முருகன் பல்வேறு இடங்களில், பல்வேறு வேடங்களில் வந்து வள்ளியின் அன்பைச் சோதிக்கிறார். முருகன் மனிதனை மனித வேடத்திலே அணுகவேண்டும் என்பதற்காக பல்வேறு திருவிளையாடல்களை மேற்கொள்கின்றார். எனினும், அத்திருவிளையாடல்களினால் வள்ளியை மனமாற்றம் செய்யமுடியாமல்போக, தடைகள் பலவற்றை எதிர்கொள்கிறார்.

**உண்மை வெளிப்படல்**

வள்ளியினுடைய மனதினை மனமாற்றம் செய்வதற்காகப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றார். செட்டியாகத் தன்னை மாற்றம் செய்துகொண்ட முருகன், பெண்கள் இயல்பாக மனமாற்றம் செய்யும் தங்கத்தால் செய்த ஆபரணங்கள் பலவற்றையும் காட்டுகின்றார். எனினும், சாதாரண பெண்களைப்போல் இல்லாமல் வள்ளி தனது குலத்தின் மீதும் தன்னை முருகன் ஆட்கொள்வார் என்ற திடமான நம்பிக்கை அவளிடம் இருந்துள்ளது. இவ்வாறான நிலையில் தனியாக சுனைக்கு அழைத்துச் செல்லும்போதும் சுனையில் நீராடும்போதும் அவள் தன்னிலையில் இருந்து விடுபடாதவளாக இருந்தபோது, விநாயகரின் உதவியை நாடியே தனது உண்மையான சொரூபத்தைக் காட்டுகிறார்.

**ஒன்றிணைதல்**

பல்வேறு மனநிலையில் உள்ளவர்களை ஒன்றிணைத்தல் என்பது சாதாரணவிடயமன்று. உயர் பண்பாட்டைக்கொண்ட தெய்வானையையும் வேடுவகுலத்தில் பிறந்த வள்ளியையும் இரண்டு மனைவிகளாக முருகன் கொண்டுள்ளான். இதனை முதல் மனைவியாகிய தெய்வானை ஏற்றுக்கொள்வதென்பது சாதாரண விடயமன்று. இந்த குடும்ப அமைப்பினைக்கொண்டு வருவதற்காகப் பல்வேறு கட்டுடைப்புக்கள் இடம்பெறுகின்றன. அதாவது, பத்தியும் அன்பும் இறைவனை அடைவதற்கான மார்க்கமாகின்றன. இறைவன் சாதி, குலம், சமூக அந்தஸ்து பாராமல் அனைவருக்கும் அருள் புரிகின்றான். மேலும், வெவ்வேறு பண்பாட்டு அம்சங்களையும், வழிபாட்டு முறைகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு பரந்த தன்மையை இது உணர்த்துகிறது.

**முடிவுரை**

அமைப்பியல் நோக்கில் வள்ளியம்மையின் பாத்திரத்தை ஆராயும்போது, அவர் வெறும் ஒரு கதைமாந்தர் என்பதைத் தாண்டி, பல்வேறு சமூக, பண்பாட்டு, தத்துவார்த்தக் கூறுகளை இணைக்கும் ஒரு மையப்புள்ளியாக விளங்குவது புலனாகிறது. இருமை எதிர்வுகள், உறவுமுறைகள், குறியீடுகள் ஆகியவற்றின் மூலம் கட்டமைக்கப்படும் வள்ளியம்மையின் கதை, தமிழ்ப் பண்பாட்டில் ஆழமான பொருளையும், தொடர்ச்சியான முக்கியத்துவத்தையும்

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

கொண்டுள்ளது. இந்த அமைப்பு, மனித வாழ்வின் பல்வேறு நிலைகளையும், தெய்வீகத்துடனான அதன் தொடர்பையும் புரிந்துகொள்ள ஒரு சட்டகத்தை வழங்குகிறது.

**குறிப்புகள்**

[1] இரத்தினநாயக்கர் ஸன்ஸ், டீ. இ. *ஸ்ரீ கந்தபுராண வசனம்.* திருமகள் விலாச அச்சியந்திர சாலை, 1954.

[2] பாலசுப்பிரமணியம், இ. *தமிழ்க்கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்.* காளீசுவரர், கோயம்புத்தூர், 2000.

[3] தமிழ்வாணன், லேனா. *கந்தபுராணம்.* மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1998.

[4] தயாநிதி, முருகு. *வள்ளியம்மன் அம்மானை.* தமிழ்ப்புதுவை, புதுச்சேரி, 2019.

[5] தயாநிதி, முருகு. *மட்டக்களப்புத் தமிழகத்தில் வள்ளியம்மை.* (புராணம் – அம்மானை - கூத்து - கரகம்) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 2025.

[6] தயாநிதி, முருகு. *வள்ளியம்மை கூத்து.* தமிழ்ப்புதுவை, புதுச்சேரி, 2019.

[7] ராமநாதன், அரு. *ஸ்ரீகந்தபுராணம்.* பிரேமா பிரசுரம், சென்னை, 1995.

[8] வடிவேல், வே. *வள்ளி தினைப்புனம் – கரகம்.* (கையெழுத்தப்பிரதி).

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.